Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDENESDAY, MAY 11, 2022

புதன்கிழமை மே 11, 2022 | ஒளி: 07 கதிர் 302 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

# களேபரத்தில் 8 பேர் பலி; 249 பேர் படு காயம்

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற மோதல்களில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், 249 பேர் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோதல்களில் காயமடைந்த 232 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அதில் ஐவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

தொடர்ச்சி P2








## 'மொட்டு'வின் சொத்துக்கள் கருகுகின்றன

## ஆளும் கட்சியினரின் வீடுகளுக்கு தீ

## போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் நேற்றும் தொடர்ந்தன

## கடைகள் இழுத்துப் பூட்டப்பட்டன

## நகரங்கள் யாவும் வெறிச்சோடி கிடந்த

## ஆயுதம் தரித்த முப்படையினரும் உஷார் நிலையில்

# ஊரடங்கிலும் அடங்கா கோபம்

பா.நிரோஸ்

நாட்டில் அவசரகால மற்றும் ஊரடங்கு, ஆகிய இரண்டு சட்டங்களும் அமுலில் இருக்கிறதா? என்று சந்தேகப்படும் அளவுக்கு, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நேற்றும் (10) முன்னெடுக்கப்பட்டன.

காலி முகத்திடலில் முன்னெடுக்கப்படும் "கோட்டா கோ கம" போராட்டத்துக்கு நேற்றுடன் 31 நாட்கள் நிறைவடைந்தன. அங்கும் பெருந்திரளான போராட்டக்காரர்கள் குழுமியிருந்து தங்களுடைய எதிர்ப்பை முன்னெடுத்தனர்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ஆதரவு குண்டர்களால், "மைனா கோ கம", "கோட்டா கோ கம" ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை கண்டித்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன. இவ்விரு கமவின் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, போராட்டக்காரர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்வாதிகளின் வீடுகள், சொத்துக்கள் மற்றும் வாகனங்களுக்கு சேதம் விளைவித்தனர்.

ஊரடங்குச் சட்டம் நேற்று (10) அமுலில் இருந்தபோதும், அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

ஆளுங்கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்தவின் வீடு முதலில் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. தொடர்ச்சி P2

## ஜனாதிபதி விலகினால் தாம் பொறுப்பேற்போம்

### ஐ.ம.ச. பாராளுமன்ற கூட்டத்தில் தீர்மானம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள தாம் தயாரில்லை எனவும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் மட்டுமே அடுத்ததாக அரசாங்கத்தை பொறுப்பேற்பது குறித்து ஆராய முடியும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற கூட்டத்தில் சஜித் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## துப்பாக்கி சூடு நடத்த முப்படைக்கும் அதிகாரம்

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மற்றும் பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடிக்கும் நபர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முப்படைகளுக்கும் கட்டளையிடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று (10) தெரிவித்துள்ளது.

நாட்டல் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட கலவரத்தை அடுத்து நாடளாவிய ரீதியில் வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள் பலரது வீடுகள் சேதமாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## மஹிந்தவைக் கூப்பிட்டு முகாமுக்கு முன் கூப்பாடு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள், திருகோணமலை கடற்படை தளத்தில் தஞ்சமடைந்திருப்பதாக வெளியாகிய செய்தியையடுத்து முகாமுக்கு முன்னால் ஒன்று கூடிய பொதுமக்கள், மஹிந்தவை வெளியே வருமாறு கூறி பேரொலி எழுப்பினர்.

தொடர்ச்சி P2

### மக்களின் கோபம் நியாயமானாலும்

## வன்முறையை கையாள வேண்டாம்



பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடித்து நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டுவந்த ஆட்சியாளர்களின் மீதான மக்களின் கோபம் நியாயமானது, ஆனால் அதனை வன்முறையாக கையாள வேண்டாம். இனியும் அழிவுகளை தாங்கிக்கொள்ளும் சக்தி இந்த பூமிக்கு இல்லை என தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) தலைவர்

தொடர்ச்சி P2

## பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தவும்




சகல மக்களும் அமைதியை பேணவேண்டும் எனவும் எனவும் அரசியல் சார்புகளைப் பொருட்படுத்தாமல், அனைத்து பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பழிவாங்கல் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மக்கள் அமைதியை பேணவேண்டும் எனவும்,

தொடர்ச்சி P2

## நாடுமுழுவதும் வன்முறை செயல்களைத் தூண்டின



மக்களின் அரசியலமைப்பு உரிமைகளில் சட்ட விரோதமாக தலையிட்டு, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது திங்கட்கிழமையன்று (09) மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜய் ராஜரத்னம் கடிதம் மூலம், நேற்று (10) வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## பாராளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுங்கள்



### ஜனாதிபதியிடம் சபாநாயகர் கோரிக்கை

பா.நிரோஸ்

"கோட்டா கோ கம", "மைன கோ கம" ஆகியன தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டில் ஏற்பட்டு வரும் வன்முறைச் சம்பவங்களையடுத்து, உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், சபாநயாகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## தேசபந்து தென்னகோன் மீது துரத்தித் துரத்தி தாக்குதல்

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது, கங்காராமைக்கு அருகில் வைத்து மக்கள் சிலரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதையடுத்து படுகாயமடைந்த அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

## இலங்கையை உன்னிப்பாக கண்காணிக்கின்றோம்

### அசம்பாவிதங்கள் தொடர்பில் சுயாதீனமாகவும், நடுநிலையாகவும் விசாரணை அவசியம்



இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஐ. நா மனித உரிமைகள் அலுவலகம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், அதுகுறித்து அறிக்கை அளிக்கும் எனவும், தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வொன்றை பெற்றுக்கொள்ளவும், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்தவும், அதேபோல்

தொடர்ச்சி P2

## அப்பா நாட்டை விட்டு எங்கும் செல்லமாட்டார்



முன்னாள் பிரதமரும் தனது தந்தையாரும் ஆகிய மஹிந்த ராஜபக்ஷ, நாட்டை விட்டு எங்கும் செல்லமாட்டார் என்று அவருடைய மகனும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ, நேற்று (10) தெரிவித்தார்.

சர்வதேச ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே நாமல் ராஜபக்ஷ எம்.பி மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஊரடங்கிலும் அடங்கா கோபம்

அதன் பின்னர் ஆராச்சிகட்டுவ பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் ஜகத் சமந்த ஆகியோராது வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

முன்னாள் அமைச்சர்களான ரமேஸ் பத்திரன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பிரசன்ன ரணதுங்க, நிமலன்சா, பந்துல குணவர்தன, ரோஹித அபேகுணவர்தன, விதுர விக்ரமநாயக்க, கெஹலிய ரம்புக்வெல, விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்தன ஆகியோரது வீடுகள் தாக்கப்பட்டு தீயிட்டு கொளுத்தப்பட்டன.

முன்னாள் அமைச்சர்கள் பலரின் அலுவலகங்கள், அவர்களுக்கு சொந்தமான நிறுவனங்கள், ஹோட்டல் என்பனவும் பொதுமக்களால் தாக்கப்பட்டு தீயிட்டு கொளுத்தப்பட்டன. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிபால கம்லத்தின் அலுவலகம், கோகிலா குணவர்தனவின் நீர்கொழும்பு இல்லமும் தாக்கப்பட்டிருந்தன.

வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாதவகையில் ரா ராஜபக்ஷர்களின் சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஹம்பாந்தோட்டையில் உள்ள டி.ஏ. ராஜபக்ஷவின் நினைவுத்தூபிகள் தாக்கியழிக்கப்பட்டதோடு, குருநாகலில் உள்ள மஹிந்தவின் இல்லமும் தீவைக்கப்பட்டு முற்றாக அழித்தொழிக்கப்பட்டது. அதுபோல சமல் ராஜபக்ஷவின் வீடு, அவரது அலுவலகமும் தாக்கப்பட்டு தீயிடப்பட்டது. மல்வானையில் உள்ள பெசில் ராஜபக்ஷவுக்கு சொந்தமானதென சந்தேகிக்கப்படும் வீட்டுக்கும் போராட்டக்காரர்கள் நேற்று (10) தீவைத்தனர்.

அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்கிவிட்டு, தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பிக்கொண்டிருந்த மஹிந்த ஆதரவாளர்களை மடக்கிப்பிடிக்க பொதுமக்கள் நாடெங்கிலும் உள்ள பிரதான வீதிகள், அதிவேக நெடுஞ்சாலைகளில் காத்திருந்தார்கள்.

பிரதான வீதிகளில் பயணித்த பஸ்கள், வான்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களையும் பொதுமக்கள் சோதனையிட்டப் பின்னரே செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

குறிப்பாக அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்த பொலிஸாரின் வாகனங்களும் இடைநிறுத்தப்பட்டு பொதுமக்களால் கடுமையாக சோதனைக்குட்படுத்தப்பட்டன.

விமான நிலையங்களுக்கு முன்பும் சோதனை விமானங்கள் ஊடாக ராஜபகசக்கள் நாட்டை விட்டுத் தப்பியோடலாம் என்பதால், கட்டுநாயக்க விமான நிலையம், இரத்மலானை விமான நிலையங்களுக்கு சென்ற அனைத்து வாகனங்களையும் வீதிகளை மறித்திருந்த இளைஞர்கள் சோதனையிட்டனர். ராஜபக்ஷர்கள், அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்கள், அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் இந்த வாகனங்களில் பயணிக்கவில்லை என்பதை உறுதி செய்துகொண்டதன் பின்னரே வாகனங்கள் விமான நிலையங்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டன.

இதனால் கட்டுநாயக்க விமான நிலையத்தின் முன்பாக அதிகளவான இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பலத்தப் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

## ஜனாதிபதி பதவிவிலகினால் பொறுப்பேற்போம்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழு நேற்று (10) காலையில் கூடியது. நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற பொதுமக்களை எதிராக வன்முறைகளை கையாண்ட செயற்பாடு மற்றும் பிரதமர் மற்றும் அமைச்சரவை பதவி நீக்கம் குறித்தும், அடுத்தகட்ட அரசியல் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர். இப்போதுள்ள நிலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் மீதான மக்களின் பார்வை திரும்பியுள்ளதாகவும், மக்களை நெருக்கடியில் இருந்து மீட்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்க்கட்சி செய்யவேண்டிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

அதேபோல் பிரதமர் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் அது குறித்து கட்சியின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. எனினும் நாட்டின் நெருக்கடி நிலைமை மோசமானதாக அமைந்துள்ள போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள தாம் தயாரில்லை என்பதே எதிர்க்கட்சி தலைவரின் நிலைப்பாடு எனவும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் மட்டுமே அடுத்ததாக அரசாங்கத்தை பொறுப்பேற்பது குறித்து ஆராய முடியும் எனவும் சஜித் தெரிவித்துள்ளார். அதற்கு கட்சியின் முழுமையான இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழு இன்றைய தினம் காலையில் மீண்டும் கூடுவதுடன் சில முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வன்முறையை கையாள வேண்டாம்

அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்,

பொதுமக்கள் மீது இடம்பெற்ற வன்முறை தாக்குதலுக்கு மஹிந்த ராஜபக் ஷவே பொறுப்புக்கூற வேண்டும், திட்டமிட்டு குண்டர்களை அலரிமாளிகைக்கு வரவழைத்து ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்களை தாக்க குண்டர்களை தூண்டிவிட்டு பொதுமக்கள் மீது வன்முறைகளை பயன்படுத்த தூண்டியது அவரே. அவருடன் அலரிமாளிகையில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் காரணமாகும்.

பொதுமக்களுக்கு எதிராக வன்முறையை தூண்டிய இவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும். இவர்களை குடும்பத்துடன் தண்டிக்க வேண்டிய அளவிற்கு ஊழல் செய்துள்ளனர். அவர்களை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியாது என்றால் என்னை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று எனது சாட்சிகளின் மூலமாக அவர்களை நீதி மன்றத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கும் நான் தயராக உள்ளேன்.

துமக்கள் வன்முறையை கையில் எடுக்க வேண்டாம், வன்முறைகளில் சிக்கித்தவித்த அனுபவம் எமக்கு உள்ளது. இரண்டு மிகப்பெரிய சமூக அழிவுகளை சந்தித்துள்ளோம். சிங்களவர்களும், தமிழர்களும் அளவுக்கு அதிகமாக இரதம் சிந்தியுள்ளனர். இனியும் அழிவுகளை தாங்கிக்கொள்ளும் சக்தி இந்த பூமிக்கு இல்லை. பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடித்து நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டுவந்த ஆட்சியாளர்களின் மீதான மக்களின் கோபம் நியாயமானது, ஆனால் அதனை வன்முறையாக கையாள வேண்டாம். ஆரோக்கியமான புத்திசாலித்தனமான மாற்றத்தை உருவாக்குவோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம். சகல இன மக்களும் ஒண்றிணைந்து மீண்டும் நாட்டை கட்டியெழுப்புவோம் என்றார்.

## அப்பா நாட்டை விட்டு எங்கும் செல்லமாட்டார்

“நாங்கள் வெளியேறப் போகிறோம் என்று நிறைய வதந்திகள் பரவுகின்றன, நாங்கள் நாட்டை விட்டு வெளியேற மாட்டோம்” என்று அவர் குறிப்பிட்டார்.

“எனது தந்தை பாதுகாப்பான இடத்தில் பாதுகாப்பாக இருக்கிறார் எனவும் அவர் குடும்பத்துடன் தொடர்பு கொள்கிறார் என்றும் தெரிவித்தார்.

## துப்பாக்கி சூடு நடத்த முப்படைக்கும் அதிகாரம்

இந்த வன்முறை சம்பவங்களுக்கு நடுவே பொது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுவதாகவும் பதிவாகியுள்ளது. இந்நிலையில் பொது சொத்துக்களை பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மற்றும் பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடிக்கும் நபர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி வன்முறைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு முப்படைகளுக்கும் கட்டளையிடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மூலமாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தவும்

அரசியல் சார்புகளைப் பொருட்படுத்தாமல், அனைத்து பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பழிவாங்கல் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் எனவும், பொருளாதார நெருக்கடி தீர்வுக்கு, அரசியல் அமைப்பின் ஆணைக்கு அமைய, பொது இணக்கப்பாட்டு ரீதியான நடவடிக்கை அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார மீட்சிக்கும் அரசியல் யாப்பு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## தேசபந்து தென்னகோன் மீது துரத்தித் துரத்தி தாக்குதல்

நேற்றையதினம் (10) தேசபந்து தென்னகோன் தனது வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது பொதுமக்கள் குழுவினரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

“கோட்டா கோ கம” வில் ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்க யார் உத்தரவிட்டது என்று கேட்ட அவர்கள், தென்னகோனை தாக்கத் தொடங்கியதும் அவர் ஓட்டம் பிடித்தார். பின்தொடர்ந்து ஓடியவர்கள், உதைத்தனர். தலைக்கவசத்தால் அடித்தனர். எனினும், அவர் தப்பியோடிவிட்டார்.

நேற்று (10) போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு அவர், சிவில் உடையில் வந்திருந்தார். எனினும், அவரை மக்கள் அடையாளங்கண்டு கொண்டனர். அதுமட்டுமன்றி, அவரின் வாகனத்துக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து மக்களைக் கலைப்பதற்காக பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

“கோட்டா கோ கம“ வில் அமைதியானப் போராட்டக்கார்கள் தாக்கப்படுவதற்கு முன்னர் ஆளுங்கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்தவும் தேசபந்து தென்னகோனும் காலிமுகத்திடல் வீதியில் ஒன்றாக நடந்து வரும் படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன.

அத்துடன், போராட்டக்காரர்கள் மீதான குண்டர்களின் தாக்குதலை தடுக்க தவறியமைக்காக தேசபந்து தென்னகோன் மீது மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## இலங்கையை உன்னிப்பாக கண்காணிக்கின்றோம்

அதேபோல் வன்முறைகளைத் தடுக்கவும் இலங்கை உறுதியான தீர்வைக்காணும் என எதிர்பார்ப்பதாகவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பெச்சலட் தெரிவித்துள்ளார்.

அரச ஆதரவு குண்டர்களினால் நடத்தப்பட்ட வன்முறை சம்பவங்கள் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவற்றை கூறியுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதானது,

அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட போராட்டக்காரர்கள் மீது பிரதமரின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவதையும், அதைத் தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்று வருவதையும் கண்டு நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். தற்போது இடம்பெற்றுள்ள அசம்பாவிதம் தொடர்பில் சுயாதீனமாகவும், நடுநிலையாகவும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதுடன் வன்முறையைத் தூண்டுபவர்கள் அல்லது ஒழுங்கமைப்பவர்கள் சகலரும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வது மிகவும் முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வன்முறைகளைத் தடுக்கவும், அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதுகாப்புப் படைகள் உட்பட அதிகாரிகள், நிலைமையைக் கட்டுப்படுத்துவதில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், அவசரகால நிலைமையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் எதிர்ப்பை ஒடுக்கவோ அல்லது அமைதியான போராட்டத்தைத்தடுக்கவோ பயன்படுத்தக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மஹிந்தவைக் கூப்பிட்டு முகாமுக்கு முன் கூப்பாடு

அலரி மாளிகையில் இருந்து நேற்று (10) காலை மஹிந்த வெளியேறியதையடுத்து, கொழும்பு பொலிஸ் பார்க் மைதாகத்திலிருந்து ஹெலிகொப்டர் ஒன்று சிலரை ஏற்றிச் செல்லும் வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தது. மஹிந்த, மனைவி மற்றும் அவர்களின் மருமகள் ஒருவர் உட்பட குடும்பத்தினர் அந்த ஹெலியின் மூலம் திருகோணமலை கடற்படை முகாமில் இருந்து கப்பல் மூலம் நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மேலும் சில அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களும் திருகோணமலை கடற்படை தளத்தில் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின. அதனையடுத்து, அங்கு ஒன்று கூடிய மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டதுடன், மஹிந்தவை வெளியே கூப்பிட்டு பேரொலி எழுப்பினர்.

## நாடுமுழுவதும் வன்முறை செயல்களைத் தூண்டின

கொழும்பில் நடந்த சம்பவங்கள், நாடு முழுவதுமுள்ள மக்கள் மற்றும் அவர்களது உடைமைகளை உள்ளடக்கிய தீவிரமான வன்முறைச் செயல்களைத் தூண்டிவிட்டதால் மேலதிக விசாரணைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு அறிவுறுத்துவதாக கடித்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சம்பவங்களைச் சூழ்ந்துள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச பாதிப்புகளைக் கருத்திற் கொண்டு, அவசர முன்னுரிமை அடிப்படையில் விசாரணைகளை முடிக்குமாறு, பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 14 (1) (அ) (ஆ) மற்றும் (ஆ) பிரிவுகளின் அடிப்படையில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்து சுந்திரம், அமைதியான ஒன்று கூடல் ஆகிய அரசியலமைப்பு உரிமைகளை மக்கள் பயன்படுத்தி நாட்டின் பல்வேறு இடங்களில் மக்கள் சில வாரங்களாக எதிர்ப்பில்

## களேபரத்தில் 8 பேர் பலி; 249 பேர் படு காயம்

கோட்டா கோகமவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது, முன்னாள் பிரதமரின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து நாட்டின் பல இடங்களிலும் வன்முறைகள் வெடித்தன.

நிட்டம்புவயில் இடம்பெற்ற களேபரத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொலனறுவை மாவட்ட எம்.பி அமரகீர்த்தி அத்துகோரளை, அவருடைய மெய்ப் பாதுகாவலர் ஆகியோர் உயிரிழந்தனர்.

மேலும், பொலிஸ் உப பரிசோதகர் ஒருவர் கண்ணீர்ப் புகைத் துப்பாக்கி வெடித்ததில் உயிரிழந்ததுடன், இமதுவ பிரதேச சபையின் தலைவர் ஏ.வி.சரத் குமார, அவரது இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுங்கள்

கடந்த 6ஆம் திகதி இறுதியாக பாராளுமன்ற அமர்வு இடம்பெற்றிருந்த நிலையில் இம்மாதம் 17ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தை அவசரமாக கூட்டுமாறு சபாநாயகர் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்துள்ளார். எவ்வாறாயினும் பாராளுமன்ற நிலையியற்கட்டளைகளின் பிரகாரம், 48 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும் சந்தர்ப்பத்தில், ஒத்திவைக்கப்பட்ட தினத்துக்கு முன்பாக பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு சபாநாயகரிடம் பிரதமர் கோரிக்கை விடுக்க வேண்டும். அவ்வாறு விடுக்கும் பட்சத்தில் சபாநாயகரால் பாராளுமன்றத்தைக் கூட்ட முடியும்.

எனினும் தற்போது நாட்டில் பிரதமர் ஒருவர் இல்லை என்பதால் பாராளுமன்றத்தை கூட்டுவது தொடர்பான சட்டசிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் இன்றைய தினம் (11) கட்சி தலைவர்கள் கூட்டமொன்றும் சபாநாயகர் தலைமையில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற உள்ளது.

இதன்போது பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் இல்லாத சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தைக் எவ்வாறுக் கூட்டுவது என்பது தொடர்பில் கலந்துரையாடப்படப்படுமெ ன எதிர்பார்க்கப்படுகிறது.

# மஹிந்தவையும் கையாட்களையும் கைது செய்து நீதியின் முன் நிறுத்துக

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு தெரிவிப்பு



அலரி மாளிகைக்கு முன்னாலும் காலிமுகத்திடலிலும் நடத்தப்படும் ஜனநாயக ரீதியான போராட்டத்தினை மொட்டு கட்சியினர் திட்டமிட்டு சிதைத்தழிக்க கிராமிய ஏழைகளையும் சிறை கைதிகளையும் ஒன்றுதிரட்டி வந்து பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினை அரச பயங்கரவாதத்தின் குகையாக்கி அவர்களால் முன்னெடுக்கப்பட்ட வன்முறை மொட்டுக் கட்சியினரதும் அவர்களின் தலைமையினதும் கொடூர முகத்தையும் தொடர்ந்து இடம்பெற்றுள்ள வன்முறையினையும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையாக கண்டிப்பதோடு வன்முறைக்கு பதில் வன்முறையல்ல என்பதை மீண்டும் வழியுறுத்துகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

ஜனநாயக ரீதியிலான போராட்டத்திற்கு ஆதரவாக செயல்பட்ட பொதுமக்களும் ஈற்றில் வன்முறையை கையில் எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய நிலைக்கு மூலகர்த்தாவாக செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷவும் அவரது கையாட்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படல் வேண்டும். எந்த நாட்டிற்கு தப்பி சென்றாலும் அவர் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வந்து நீதி முன்னால் நிறுத்தப்பட வேண்டும் என்பதே அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும்.

வன்முறையை தமதாக்கியவர்களும் தாக்குதலுக்கு உள்ளானவர்களும் தேசியக்கொடியுடன் நின்றனர். தெற்கில் தேசியக் கொடி என்பது வன்முறையின் அடையாளமாகியுள்ளது.இதுவே கடந்த கால அனுபவமுமாகும். இதனோடு பௌத்த கொடியை இணைத்து கொள்வதையும் நாம் கண்டுள்ளோம்.இது தேசிய பேரினவாதத்தின் சிந்தனையோடு தான் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பும் இன்றும் முன்னெடுக்கப்படுவதோடு 2009 இனப்படுகொலையும் நடத்தப்பட்டது. வெற்றிக் கொண்டாட்டமும் வருடா வருடம் நடத்தப்படுகின்றது.இதற்கு பரிகார நீதி கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்ல.

இந்நிலையில் வட கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நடைபெறும் வன்முறை தீ வைப்பு சம்பவங்கள் இன அழிப்பு நினைவு கூறல் நிகழும் மே மாதம் நிகழ்வதை கண்டு தமிழர்கள் மகிழ முடியாது., மகிழவும் கூடாது.இங்கு நடப்பது யுத்தமும் அல்ல இன அழிப்பும் அல்ல. இதற்கு முகம் கொடுத்தார்களாக ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் , எமது குரலை உயர்த்த வேண்டிய மனிதாபிமான கடப்பாடும் நமக்கு உள்ளது. இது தெற்கின் மக்களுக்கு எமது நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்தும். தமிழர்கள் அமைதி வழியில் தான் போராட்டத்தை ஆரம்பித்து நிறுத்த நிலைக்கு தள்ளப்பட்டனர் ஆதலால் நீதி ஜனநாயக உரிமைகள் காக்கப்பட வேண்டும் அமைதி நிலவவேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருத்தல் வேண்டும்.

தற்போதைய நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு எதிர்வரும் 18ஆம் திகதி வட கிழக்கில் நடைபெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முற்போக்கு சக்திகளும்,ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டம் செய்வோரும் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும். ஆட்சியாளர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எந்தவகையிலும் தடுப்பதற்கு நினைக்காது அமைதியான முறை யில் அதனை நிகழ்த்து வதற்கு வழி ஏற்படுத்த வேண்டும் எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.



ராஜபக்ஷர்கள் மீதாம மக்கள் எதிர்ப்பு செயற்பாடுகளினால் மெதமுலனயில் அமைக்கப்பட்டிருந்த டி.ஏ ராஜபக்ஷவின் சிலை ஆர்ப்பாட்டக்காரர்களால் இடித்து வீழ்த்தப்பட்டது

# மஹிந்த ராஜபக்ஷ மீது உடனடியாக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்

## சட்டத்தரணிகள் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை

"மைனா கோ கம" மற்றும் "கோட்டா கோ கம" போராட்டத்தின் மீதான தாக்குதலை திட்டமிட்ட முன்னாள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு சட்டத்தரணிகள், பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று (10) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க இந்த கோரிக்கையை விடுத்தார்.

அலரி மாளிகைக்குள் திட்டமிட்டு குண்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார். அலரி மாளிகைக்குள் செல்லும் போது அவர்களிடம் வாள், பொல்லுகள் என்பன இருக்கவில்லை எனவும் அங்கு நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர்கள் வெளியே வரும்போது பாரிய அளவிலான வாள்கள், பொல்லுகளை ஊடகங்கள் வாயிலாக காணக்கூடியதாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

இந்த குண்டர்கள், முதலில் மைனா கோ கமவை தாக்க சென்றதையும் காணக்கூடியதாக இருந்ததாக சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார். இவர்கள் இவ்வாறு செல்லும் போது புலனாய்வு அதிகாரிகள் எங்கு சென்றார்கள் என அவர் கேள்வியெழுப்பியதுடன், போராட்டக்களத்தில் தாக்குதல் மேற்கொள்வதற்கு பொலிஸார் இடமளித்ததாகவும் அவர் கூறினார்.

## மக்களின் ஆவேசமான செயற்பாடுகள்

# இராணுவ ஆட்சிக்கு வழிவகுக்கும்



ஆர்.யசி

அரசாங்கத்தை எதிர்த்து அலரிமாளிகைக்கு முன்பாகவும், காலிமுகத்திடலிலும் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட அரச ஆதரவு குண்டர்களின் தாக்குதலை அடுத்து நாட்டில் ஏற்பட்ட கலவரம் காரணமாக நேற்று முன்தினம் இரவு தொடக்கம் இன்று காலை வரையில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவசரகால சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் மக்களின் போராட்டங்களை சாதகமாக பயன்படுத்தி அதனை வன்முறையின் பக்கம் கொண்டு செல்வதாகவும் , நாட்டில் தற்காலிக இராணுவ ஆட்சியை கொண்டுவரும் சாதகத்தன்மைகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டி சட்ட வல்லுநர்கள், சிரேஷ்ட அரசியல் வாதிகள் ,சர்வதேச நிபுணர்கள் மற்றும் ஊடகங்கள் கருத்துக்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு ஏற்றால் போல் கடந்த இரண்டு தினங்களாக நாடு முழுவதும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், துறைமுகப்பகுதிகள் மற்றும் கட்டுநாயக்க, ரத்மலானை, மத்தலை விமானநிலையங்களை அண்மித்த பகுதிகளில் கடற்படை மற்றும் விமானப்படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேல்மாகாணத்தில் முழுமையாக இராணுவத்தின் பாதுகாப்பு செயற்பாடுகளையே அவதானிக்கக்கூடியதாக இருந்தது. நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பித்த வன்முறை தாக்குதலை அடுத்து நாடு முழுவதும் பரவிய வன்முறைச் சம்பவங்களினால் நாடளாவிய ரீதியில் பொலிஸாருடன் இணைந்து இராணுவம் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படும் என இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்த போதிலும் நாடளாவிய ரீதியில் இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனநாயக ரீதியில் அமைதியாக தமது போராட்டங்களை முன்னெடுத்து வந்த பொதுமக்கள் தற்போது ஆவேசப்பட்டு ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளின் வீடுகளை தாக்கி தீவைக்கும் சம்பவங்களை அடுத்தும், பொது சொத்துக்களை சேதப்படுத்துவதை அடுத்தும் தற்காலிகமாக நாட்டை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுசெல்லும் நிலையொன்று காணப்படுவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் உள்ளிட்டவர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

மக்களின் கொந்தளிப்பை, ஆத்திரமடைந்த குண்டர் கும்பல் என்ற போர்வையில் சித்தரித்து அதனை கட்டுப்படுத்த இராணுவ ஆட்சி கொண்டுவரப்படக்கூடும் எனவும், சட்டத்தின் ஆட்சி அரசியலமைப்பின் மூலம் உறுதிசெய்யப்படவேண்டுமே தவிர, துப்பாக்கிகளால் உறுதிசெய்யப்படக்கூடாது எனவும், மக்கள் அமைதியான முறையில் தமது போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளதுடன்,

இராணுவ ஆட்சிக்கு வழி வகுக்கும் வகையில் வன்முறையைத் தூண்டுவதற்கு அராஜகக்கார்கள் பயன்படுத்தப்படலாம். இப்போதும் இராணுவ ஆட்சிக்கு வழி வகுக்கும் வகையில் வன்முறைகள் தூண்டிவிடப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையில், ஒருங்கிணைந்த யுக்திகள் ஊடாக குறித்த அபாய நிலைமைகளை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் மக்கள் அமைதியை கையாள வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அதேபோல் அவசர காலச்சட்டம், ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி அமைதியாகப் போராடும் மக்கள் மீது குண்டர்களை ஏவித் தாக்குதல் நடத்தி, வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதன் மூலம் இராணுவ அரசாங்கம் ஒன்றை கொண்டு முயற்சி நடக்கிறதாக என சந்தேகம் எழுகின்றது என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டம் தொடர்பில் தற்போது ஜனாதிபதி விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலை அடிப்படையாக வைத்து சர்வதேச கண்காணிப்பாளர்கள் மற்றும் சர்வதேச ஊடகங்கள் இதேபோன்ற கருத்துக்களை முன்வைத்துள்ளதுடன், பொறுப்புவாய்த்த அரசியல் தலைமைகள் மக்களின் கோவத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இது வெளிநாட்டு விவகாரமென தட்டிக்கழித்துவிட வேண்டாம்

## இலங்கை விவகாரம் குறித்து இந்திய மத்திய, மாநில அரசுகளுக்கு டி.டி.வி அறிவுரை



பத்தில் இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இப்போதாவது உதவுவதன்மூலம், காங்கிரசோடு கூட்டுச் சேர்ந்து இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்றொழித்த பாவத்திற்கு தி.மு.க சிறிதாவது பரிகாரம் தேடிக்கொள்ளலாம் எனவும், 'இது வெளிநாட்டு விவகாரம்' என்று தட்டிக்கழித்துவிட நினைக்காமல், உறுதியான முடிவுகளை எடுத்து ஆட்சியாளர்கள் செயல்பட வேண்டும் என அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் டி.டி.வி தினகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வன்முறை செயற்பாடுகள் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை குறித்து தனது நிலைப்பாட்டை தெரிவிக்கும் விதமாக அவர் இவற்றை கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்.

இலங்கையில் நாளுக்கு நாள் நிலைமை மோசமடைந்து வரும் சூழலில், நம்முடைய தொப்புள் கொடி உறவுகளான அங்குள்ள தமிழர்களின் நலன் காப்பதில் மத்திய, மாநில அரசுகள் கூடுதல் அக்கறையோடு செயல்பட வேண்டும்,

'இது வெளிநாட்டு விவகாரம்' என்று தட்டிக்கழித்துவிட நினைக்காமல், உறுதியான முடிவுகளை எடுத்து ஆட்சியாளர்கள் செயல்பட வேண்டும். மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து, இலங்கைத் தமிழர்களைக் காத்திட தேவையான ஏற்பாடுகளை தமிழக அரசு செய்திட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பவேண்டும்

அரசியலமைப்புச் சட்டத்தை உறுதிப்படுத்தும் விதமாக இந்திய ராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் உறுப்பினர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையால் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைகள் மற்றும் அரசியல் ஸ்திரமற்ற தன்மைகள் குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போது இந்திய எதிர்ப்பு சர்வதேச சக்திகள் மக்களின் கோபத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றனர். இது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை பாதிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# மத்தியவங்கி ஆளுநர் –எதிர்க்கட்சி தலைவர் கலந்துரையாடல்

நாட்டைன் தற்போதைய பொருளாதார நெருக்கடி மீட்சி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தலைமையிலான மத்திய வங்கியின் அதிகாரிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசதலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கலந்துரையிடல் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.


இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளருடன் பயனுள்ள சந்திப்பை நடத்தியுள்ளதாகவும், எந்தவொரு நெருக்கடியையும் தூண்டுபவர்களுடன் வேலை செய்வதில் ஈடுபடாத வரை, எந்தவொரு பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம் எனவும், நாட்டைன் நெருக்கடி நிலைமையை சமாளிக்க தனது கட்சி எப்போதும் ஆதரவை வழங்கும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்..






# ஊரடங்கில்...

நாடளாவிய ரீதியில் இன்று (11) காலை 7 மணிவரையிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது. இந்நிலையில், கொழும்பில் சில இடங்கள் நேற்று (10) இவ்வாறு காட்சியளித்தன. (படங்கள்: பிரதீப் பத்திரண)








திங்கள் இடம்பெற்ற சம்பவங்கள்

# வரலாற்றில் ஆறாத வடு

## அரச ஆசிரியர்களின் சங்கம் கண்டனம்

வ.சக்தி

நாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) இடம்பெற்ற சம்பவங்கள் இலங்கை வரலாற்றில் ஓர் ஆறாத வடுவாக காணப்படும் என இலங்கை அரச ஆசிரியர்களின் சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் கோபாலசிங்கம் சுஜிகரன் தெரிவித்தார்.

அவரால், ஊடகங்களுக்கு நேற்று (10) அனுப்பி வைக்கப்பட்ட கண்டன அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

அரசாங்கத்துக்கு எதிராக காலி முகத்திடலில் அமைதியான முறையில் 30



நாள்களாக இடம்பெற்று வந்த போராட்டத்தை குண்டர்கள் குழப்பியமை குறித்து இலங்கை அரச ஆசிரியர்களின் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் ஒழுங்கற்ற ஆட்சியால், அதிருப்தி அடைந்த பொதுமக்கள் அரசாங்கத்துக்கு எதிராக மிகவும் அமைதியான முறையிலேயே காலி முகத்திடலில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

"எனினும், இவர்களின் குரலுக்கு அரசாங்கம் செவிசாய்க்காத நிலையில், மேற்படி கீழ்த்தரமான தாக்குதல் காரணமாக, மக்கள் இன்று ஆத்திரமடைந்து நாடு முழுவதும் அமைதியற்ற சூழல் உருவாகியுள்ளது.

நல்லதோர் அரசியல் நிலைமையை கட்டியெழுப்ப வேண்டும் என இலங்கை அரச ஆசிரியர்களின் சங்கம் இடித்துரைக்கின்றது. நிலைமை சீராகும் வரையில் மக்களின் பக்கமாக நின்றே எமது ஆசிரியர் சங்கம் போராடும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக

# அக்கரைப்பற்றிலும் தீப்பிழப்புகள்




வி.சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று, கல்முனை பிரதான வீதியின் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகில் 'அராஜகத்துக்கு எதிராக அணி திரள்வோம்' எனும் தொனிப்பொருளில் இளைஞர்கள் பலர், நேற்று முன்தினம் (09) ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

கொழும்பு, காலி முகத்திடலில் ஏற்பட்ட அமைதியின்மை மற்றும் கலவரத்தை தொடர்ந்தே, குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வீதியின் மத்தியில் டயர்கள் எரிக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



மீன்பிடி

## தோணிக்கு தீ வைப்பு

க.விஜயரெத்தினம்

பெரியநீலாவணை கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான கரைவலைத் தோணி, இனந்தெரியாத நபர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

பெரியநீலாவணை 1பீயை சேர்ந்த சிவலிங்கம் தனுஜன் என்பவருக்கு சொந்தமான தோணியே, நேற்று முன்தினம் (09) இரவு 11 மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தோணி தீப்பற்றி எரிவதைக் கண்டவர்கள், அதன் உரிமையாளரின் வீட்டுக்குச் சென்று தகவல் தெரிவித்துள்ளனர். தனது உறவினர்களின் உதவியுடன் கடற்கரைக்கு விரைந்த தோணி உரிமையாளர், தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

இது தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் நேற்று (10) அதிகாலை 01 மணியளவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தால் தோணிக்கு அருகிலிருந்த மீன்பிடி உபகரணங்கள் பல முழுமையாக சேதமாக்கப்பட்டுள்ளதுடன், கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் சுமார் 100 மீனவர் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயமாக பொலிஸாரோ அல்லது பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம சேவையாளரோ சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு உடனடியாக சமூகமளிக்கவில்லை என மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.






## ஊரடங்கில் ...

நாடு தழுவிய பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்று முன்தினம் (09) மாலை அமலுக்கு வந்த நிலையில், கிழக்கில் முழுமையாக அமல்படுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டம் இயல்பு வாழ்க்கையை முற்றாக இழந்திருந்தது. ஏறாவூர் உள்ளிட்ட நகரப் பகுதிகள் வெறிஞ்சோடிக் காணப்பட்டன.

பிரதான வீதிகள் வாகனங்களின்றி அமைதியுடன் காணப்பட்டதுடன், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

இராணுவமும் பொலிஸாரும் நகரங்களில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதுடன், சோதனை நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தினர்.

(படங்கள்: ஏ.எச்.ஏ. ஹுஸைன், ரீ.எல். ஜவ்பர்கான், வ. சக்தி)



காலி முகத்திடல் தாக்குதலுக்கு

## கிழக்கு மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



கனகராசா சரவணன்

காலி முகத்திடலில் கோட்டா கோ ஹோம் கம மீது இடம்பெற்ற தாக்குதலை கண்டித்து, கிழக்கு பல்கலைகழக மாணவர்கள், மட்டக்களப்பு ஊறணி சந்தியில் நேற்று முன்தினம் (09) இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊறணி சந்தியில் இரவு 7 மணிக்கு ஒன்றிணைந்த கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், காலிமுக திடல் தாக்குதலை கண்டித்து பல்வேறு வசனங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பினர்.

குண்டர்கள் நடத்திய தாக்குதல் சம்பவத்துக்கு

# அசாங்கமே முழுப் பொறுப்பு


கொழும்பு காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது குண்டர்களை ஏவி தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு அரசாங்கமே முழு பொறுப்பையும் ஏற்கவேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

காலி முகத்திடலில் கடந்த 30 நாட்களாக போராட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது அரசாங்கத்துக்கு சார்பாக அலரி மாளிகையில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்திய சம்பவம், தமிழ் மக்கள் மீது கடந்த 65 வருடங்களாக மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட அரச பயங்கரவாதத்தை நினைவுபடுத்துகின்றன.

தமது உரிமைகளுக்கு எதிராக சாத்வீக வழியில் போராட்டம் மேற்கொண்ட தமிழ் மக்கள் மீது படையினரை ஏவி தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் வன்முறையை கட்டவிழ்த்து விட்டிருந்தன. இதுவே பின்னர் ஆயுத போராட்டத்துக்கு தமிழ் மக்களை தள்ளியது.

அதேபோல, உணவு, எரிபொருள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றுக்கான தமது உரிமைகளை வலியுறுத்தி, அமைதியான வழியில் போராட்டம் நடத்தும் அப்பாவி மக்களின் மீது குண்டர்களை ஏவியும் படையினரின் உதவியுடனும் அரசாங்கம் மேற்கொண்ட வன்முறை மேலும் வன்முறையை தூண்டும் ஒரு



செயற்பாடாகவே அமைகின்றது.

வே, இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் இந்த சம்பவங்களில் இருந்து தூர விலகி நின்று மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தச் சம்பவத்துக்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்கவேண்டும். தமிழ் மக்கள் மீது முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நிகழ்த்தி, பல்வேறு ஆதாரங்களின் மத்தியிலும் தாம் எந்தவொரு படுகொலையிலும் ஈடுபடவில்லை என்று அரசாங்கம் இன்றுவரை எவ்வாறு வாதாடுகின்றதோ, அதேபோல, இந்தச் சம்பவத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று வாதாடும்.

பிரச்சினையை உருவாக்க

## அரசாங்கம் தீட்டிய திட்டமே கலவரம்

வி.நிதர்ஷன்

போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இடத்துக்கு அரசுக்கு சாதகமான மற்றொரு போராட்டக் குழுவை அழைத்து வந்தமை பிரச்சினையை உருவாக்க அரசாங்கம் தீட்டிய திட்டமே தவிர வேறு எதுவும் கிடையாது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும்



தெரிவிக்கையில், "அரசாங்கம் போராட்டங்களை அடக்குவதை நோக்கமாகக் கொண்டு அவசரகாலச் சட்டம் பிறப்பித்துள்ளது. அவசரகால சட்டத்தின் அடிப்படையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன.

பிரதமரை காப்பாற்றுவதாக திடீரென அலரி மாளிகை முன்பு கூடிய கும்பல், அடிதடியில் ஈடுபட்டனர்.

இதனை பார்க்கின்ற போது, மிக விரைவாக காலி முகத்திடலில் உள்ள முழு போராட்டக்காரர்களை விரட்டி, காலி முகத்திடலை மக்கள் போக்குவரத்தற்ற பிரதேசமாக மாற்றும் வேலைகள் நடைபெறுகின்றன.

முல்லைத்தீவில்

## மின்சார சபை ஊழியர் மீது சரமாரி தாக்குதல்



சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மின்சார சபை ஊழியர் ஒருவர் உட்பட மூவர் மீது மாமூலை பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமூலை பகுதியில் கடந்த 08ஆம் திகதி மாலை மின் பட்டியல் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மின்சார சபை ஊழியர் ஒருவர் மீது கிராமத்தை சேர்ந்த ஒருவர் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளார்

இதனையடுத்து குறித்த தாக்குதலுக்குள்ளான மின்சார சபை ஊழியர் தன்னுடைய அலுவலகத்துக்கு தகவல் வழங்கி, முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னணியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மின்சார சபை ஊழியர்கள் குறித்த ஊழியர் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் பார்வையிடச் சென்ற போது, அங்கு ஏற்பட்ட பிரச்சினையில் கிராமத்தை சேர்ந்த இருவர் தலையில் பலத்த காயங்களுடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்குமாறு

# இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்

லெம்பர்ட்

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, இலங்கை சிறையில் உள்ள 12 மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட 4 மீனவர்களை உடனடியாக தாயகம் அழைத்து வர நடவடிக்கை எடுக்க கோரி, தங்கச்சிமடத்தில் மீனவர்கள் நேற்று முன்தினம் (09) ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், 2019 ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு,



இலங்கை வசமுள்ள விசைப்படகுகளை மீட்டுத்தரக் கோரியும், மாநில அரசுகளை வலியுறுத்தி, கண்டன ஆர்ப்பாட்டத்தில் மீனவர்கள் ஈடுபட்டனர்.

இதில் மண்டபம், இராமேஸ்வரம் மற்றும் பாம்பன் உள்ளிட்ட பகுதியில் இருந்து ஏராளமான மீனவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## மன்னார் ஸ்தம்பிதம்

லெம்பர்ட்

நாட்டில் நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்கு உத்தரவுக்கு அமைய நேற்று (10) மன்னார் மாவட்டத்தின் இயல்பு நிலை முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

மாவட்டத்தில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை.



பாடசாலைகளும் இடம்பெறவில்லை.

இதனால் மன்னார் மாவட்டத்தின் இயல்பு நிலை முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

## புதிய நிர்வாகம் தெரிவு

சண்முகம் தவசீலன்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கி வருகின்ற இளைஞர் கழகங்களை ஒன்றிணைத்த பிரதேச ரீதியான அமைப்பாகிய ஒட்டுசுட்டான் இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தின் 2022ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், ஒட்டுசுட்டான் இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தின் தலைவி ஜெ.தனுசியா



தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஒட்டுசுட்டான் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் இ.ரமேஷ், முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் நா.குகேந்திரா பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தாக்குதல்களை கண்டித்து இரத்தினபுரி மாவட்ட தொழிலாளர்

# வேலை நிறுத்தம்

உமாமகேஸ்வரி

கொழும்பு காலி முகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக முன்னெடுத்துவரும் அஹிம்சை வழிப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கடுமையாக தாக்கி காயமடைய செய்த, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்களுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து இரத்தினபுரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்களும் இணைந்து கொண்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சுமார் 32 தோட்டங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் தோட்ட தொழிலாளர்கள் தமது கட்சி, தொழிற்சங்க



பேதங்களை மறந்து நேற்று செவ்வாய்க்கிழமை (10) வேலைக்குச் செல்லாமல் வீடுகளில் இருந்து தமது எதிர்ப்பை வெளிகாட்டினர்.

கொழும்பில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையை தொடர்ந்து, நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையில்இ இரத்தினபுரி மாவட்ட தோட்ட நிர்வாகங்கள் தோட்ட தொழிலாளர்களை வேலைக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில், தொழிலாளர்கள் எவரும் வேலைக்கு செல்லாமாமல் தமது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் வீடுகளின் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அதனையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் என்பவற்றுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவால்

# யாத்திரிகர்கள் பாதிப்பு



ரஞ்சித் ராஜபக்ஷ

சிவனொளிபாதமலைக்கு சென்ற யாத்திரிகர்கள் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். “மைனா கோ கம”, “கோட்டா கோ கம” ஆகியவன்றின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து அமைதியின்மை ஏற்பட்டது. அதனையடுத்து, நேற்றுமுன்தினம் (9) பகல் தொடக்கம் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

யாத்திரையை முடித்துக்கொண்டு ஹட்டன் ரயில் நிலையத்துக்கு திரும்பிக்கொண்டிருந்த போதே, ஊரடங்கு உத்தரவு குறித்து தாம் அறிந்துக்கொண்டதாக யாத்திரிகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹட்டனுக்கு வருகை தந்த அதிகமான யாத்திரிகர்கள் ரயில் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக ஹட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரஞ்சித் ஜயசேன தெரிவித்துள்ளார்.

இவர்கள் கொழும்பு, களுத்துறை, காலி, அம்பேபுஸ்ஸ உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களு கங்கையின் நீர் மட்டம் அதிகரிப்பு

# மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

அஜித்லால் சாந்தஉதய

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்த வரும் கடும் மழை காரணமாக, களுகங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதென நீர்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நேற்று முன்தினம் (9) இரவு பத்து மணிக்கு நீரின் மட்டம் அதிகரிக்க தொடங்கியதாகவும் நேற்று(10) அதிகாலை இரண்டு மணியளவில் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்ததாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் குக்குளே கங்கையின் நீர் மட்டம் அதிகரித்ததுடன், இரத்தினபுரி நகரை அண்மித்த முவகம, முத்துவ, ஹங்கமுவ, எலபாத ஆகிய பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலை அதிகரித்தால் இரத்தினபுரி நகரம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், மண்சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளதாக நீர்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே மண்சரிவு அபாயம் காணப்படும் பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.











# தென்னக்கோனின் வீடுகளுக்கும் தீ

காஞ்சன குமார

தம்புள்ளை- யாபாகம பிரதேசத்தில் உள்ள முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார மற்றும் பிரமித பண்டார தென்னக்கோன் ஆகியோரின் வீடுகள் நேற்று முன்தினம் (09) இரவு தீக்கிரையாகியுள்ளன.

அத்துடன் தம்புள்ளை நகர மேயர் ஜாலிய ஓபாத, அவரது தாய் மற்றும் சகோதரர்களின் வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நாவலப்பிட்டி நகரிலுள்ள முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் அலுவலகம் மீதும் நேற்று முன்தினம் (9) தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


# மலையகத்தில் ஊரடங்கு


ரஞ்சித் ராஜபக்ஷ

“கோட்டா கோ கம” மற்றும் “மைனா கோ கம” ஆகியவற்றின் மீது, முன்னாள் பிரதமர் மஹிந்தவின் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் (9) நடத்திய தாக்குதலின் எதிரொலியாக, ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. இந்த நிலையில் ஹட்டன், நுவரெலியா உள்ளிட்ட மலையக நகரங்கள் இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.









# ஆற்றில் கிடக்கும் காட்டு பன்றியை அகற்ற கோரிக்கை

துவாரகஷான்

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் அதன் ஊழியர்கள் மக்களின் நலன்களை கண்டு கொள்ளாத காரணத்தினால் பல்வேறுபட்ட அசௌகரியங்களை சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

டயகம வனப் பகுதியிலிருந்து ஊற்றெடுக்கும் ஆகுரோயா ஆறு மேல் கொத்மலை நீர்தேக்கத்துக்கு நீர் ஏந்துகின்றது. இந்த ஆற்றின் மூலம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயனடைகின்றனர்.

வெயில் காலங்களிலும் பிரதேச மக்கள் குளிப்பதற்கு இந்த ஆற்று நீரையே பயன்படுத்துகின்றனர் .

விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விவசாயிகளும் இதனை பயன்படுத்தும் நிலைமையே காணப்படுகிறது. அண்மைக்காலமாக இந்த ஆறு அசுத்தமாக மாறி வருகிறது.

மன்றாசி, அக்கரப்பத்தனை, டயகம உள்ளிட்ட நகரங்களில் உள்ள மக்கள் தங்களின் வீடுகளில் சேரும், கழிவுப்பொருட்களை இந்த ஆற்றில் கொட்டுகின்றனர் இதனால், பாரிய சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.



இது இவ்வாறு இருக்கையில் மன்றாசி பகுதியில் கடந்த 5 மாதங்களுக்கு முன்பு பலத்த காற்றின் காரணமாக மரமொன்று முறிந்து விழுந்துள்ளது. அந்த மரத்தின் கிளைகள் அனைத்தும் அப்புறப்படுத்த பட்ட போதிலும் மரம் முழுமையாக அப்புறப்படுத்தப்பட வில்லை.

இது ஆற்றின் குறுக்காக விழுந்துள்ளது. அனைத்து நகரத்தில் உள்ள குப்பைகள் இந்த மரத்துக்கு அடியில் தேங்கி நிற்பதால் ஆற்றுநீர் அசுத்தமடைகின்றது.

இப்பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள் கழிவு பொருட்கள் தேங்கி நிற்கின்றன. இவ்விடயம் தற்போது பாரிய பிரச்சினையாக மாறி வருகின்றது.

கடந்த 5 நாட்களுக்கு முன்பு இந்த ஆற்றில் 3 அடி நீளம் கொண்ட காட்டுப் பன்றி ஒன்றும் நாய் ஒன்றும் இறந்த நிலையில் கிடக்கின்றன. அவைகள் அழுகிய நிலையில் இருப்பதுடன் இதன் இறைச்சிகளை காகம் உள்ளிட்ட பறவைகள் உண்ணுகின்றன.

துர்நாற்றம் அப்பகுதியில் வீசப்படுவது பாதை வழியாக செல்லும் மக்கள் மூக்கினை மூடிக்கொண்டு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இப்பகுதியில் வாழும் பிரதேச மக்கள் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்திற்கும் பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட பொது சுகாதார அதிகாரிகளுக்கும் அறிவித்திருந்த போதிலும் இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது இப்பகுதியில் மழை பெய்து வருவதால் மேலும் பல பிரச்சினைகள் ஏற்பட கூடிய சூழ்நிலை அதிகமாகவே இருக்கின்றன என்றும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# பதிலடியும் உறுதியும் எதிர்காலத்தில் ஒரு பாடமாக அமையும்

வன்முறைகளுக்கு வன்முறைகளின் மூலமாகப் பதிலளிப்பதால், மக்களே பெரிதும் பாதிக்கப்படுவர். சிலவேளையில் மக்களின் பக்கமே வன்முறைகள் திசை திருப்பிவிடப்படும் இது கடந்தகால கசப்பான வரலாறாகும் என்பதை எந்நேரத்திலும் நினைவில் கொள்வது அவசியமானது.

“மைனா கோ கம”, “கோட்டா கோ கம” ஆகிய இரு “கம”களையும் இலக்குவைத்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கு, இரத்தத்தை சூடாக்கும் பேச்சே பிரதான காரணமாக அமைந்தது. சூடான பானங்களை அருந்தியிருந்தோருக்கு தாங்கள் என்ன செய்கின்றோம், யாரோடு மோதுகின்றோம் எனத் தெரியாமல், பணையக் கைதிகளாகச் சிக்கிக்கொண்டனர்.

அவ்வாறு சிக்கிக்கொண்டவர்களிடம் போராட்டக்காரர்கள் மேற்கொண்ட விசாரணைகளில், சிலர் சிறையிலிருந்து அழைத்துவரப்பட்ட கைதிகள் என்பதும், நகர சபைகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் என்பதும் கண்டறியப்பட்டது. ஆக, ஜனநாயக போராட்டங்களின் மீது தாக்குதல்களை நடத்த கூலிப்படையினர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கூலிப்படையினரின் வன்முறைகளுக்கு வன்முறைகளால் பதிலளிக்கப்பட்டதுடன், அடித்து நொறுக்கி தீ மூட்டி கொளுத்தப்பட்ட “கோட்டா கோ கம”வும் பன்மடங்கில் உறுதிப்படுத்தப்பட்டு மீளவும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மக்களின் போராட்டங்களின் மீது கையை வைத்தால், நாடே பற்றியெறியும் என்பதை புரிந்துகொள்ளாமையால் ஏற்பட்ட விளைவுகளே இவையாகும்.

குற்றமிழைத்தவர்களை விடவும், அந்தக் குற்றத்தைச் செய்வதற்காகத் தூண்டியவர்கள் கைது செய்யப்படவேண்டும். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கைது செய்யப்படவேண்டுமென ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி வலியுறுத்தியுள்ளார். முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவே வன்முறைச் சம்பவங்களுக்கு காரணகர்த்தாவென முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போதை தலைக்கேற நின்றிருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் குண்டர்கள், ஜோன்ஸ்டனின் ஆவேச பேச்சுக்குப் பின்னரே, தாக்குதல்களை நடத்தி இறுதியில் நன்றாக வாங்கிக்கட்டிக்கொண்டுள்ளனர். அதற்குப் பின்னரே வன்முறையும் வெடித்தது.

வன்முறைகளுக்கு பதில் வன்முறைகள் அல்ல, என்றாலும் எதிர்கால அரசியல்வாதிகளுக்கு இதுவொரு பாடமாக இருக்குமென்பதே பலரது கருத்தாக இருக்கிறது. எனினும், பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பதன் ஊடாக, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது.

பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுபவர்கள் மக்கள் சேகவர்கள், அவர்களுக்கு மிதமிஞ்சிய வரபிரசாதங்கள் வழங்கப்படுகின்றன. அதனூடாகவே பலரும் தங்களையும் குடும்பத்தினரையும் வாழவைத்துக்கொண்டிருக்கின்றனர். மக்கள் மீதான அக்கறை, தேர்தல்கள் காலங்களில் மட்டுமே அவ்வாறானவர்களின் ஞாபகத்துக்கு வருகிறது.

இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமாயின் ஆகக் கூடுதலாக வரபிரசாதங்களை வழங்கக்கூடாது. குற்றமிழைப்பது கண்டறியப்படின் குறுகிய காலத்துக்குள் தண்டனையை வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும். தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாளன்றே சொத்துகளின் விபரங்களை கையளிக்கும் முறைமையை அறிமுகப்படுத்தவேண்டும் என்பதுடன், பதிலடியும் உறுதியும் எதிர்காலத்தில் ஒரு பாடமாக அமையும். என்பதில் ஐயமில்லை.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நல்ல எண்ணங்களுக்கும் கெட்ட எண்ணங்களுக்கும் வித்தியாசம் இதுதான். நல்ல எண்ணங்கள் உலகை மேம்படுத்துகின்றன. கெட்ட எண்ணங்களைக் கொண்டவர், தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிறார்கள்.

நல்ல சிதனைகளே ஆன்மாவின் தூய்மைக்கு ஒளியாக இயங்கும். இது தூய்மையால் துலங்கும்போது, கடவுள் கடாட்சம் கிடைத்துவிடுகின்றது.

செல்வம், கல்வி, பதவி போன்றவற்றுக்கு மேலானது பரந்த இதயமாகும். இதனால், உலகை வசப்படுத்தலாம். மேதினிக்காகத் தன்னையே அர்ப்பணிப்பவர்கள், ஆன்ம பலத்தால், நன்மைமிகு காரியங்களை இலகுவில் செய்யமுடியும்.

தியாகிகளை உலகம் போற்றுகின்றது. பேராசைப்படாதவன உலகோடு இணைகிறார். தனக்கென வாழ்பவன் தனிமைப்படுத்தப்படுகின்றான்.

புகழ், பெருமைகளை விளம்பர்கள் மூலம் பெற முயல்பவர்கள், தங்களைத் தாங்களே அவமதிப்பது போலாகும்.

உலகோடு களிப்புடன் பயணம் செய்ய, ஒழுக்க மேம்பாடு அவசியமானது. மனதோடு பேசி, களங்கங்களை அகற்றுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ‘அம்மாச்சி’ உணவகத்துக்கு நெருக்கடி

முல்லைத்தீவு, மல்லாவி பிரதேசத்தில் சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் ‘அம்மாச்சி’ உணவகத்தில் பணியாற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பிரதேசத்தில் விவசாய திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்ற அம்மாச்சி உணவகத்தில், 09 வரையான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொழில் வாய்ப்பைப் பெற்று, தமது குடும்பப் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றன. இந்த நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர் இதுபோன்று, அம்மாச்சி உணவகத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்கள், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதில் பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் இதனால் தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் மேற்படி உணவகத்தில் பணியாற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

ஏனைய மாவட்டங்களில், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு என்பவற்றை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும் குறித்த பிரதேசத்தில் ஒரேயொரு எரிபொருள் நிலையம் மாத்திரமே இருப்பதாகவும் அதிலும் மண்ணென்னையை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

–யது பாஸ்கரன்

அரசாங்கமே

# வன்முறைக்குப் பொறுப்புக் கூற வேண்டும்



எம்.எஸ்.எம். ஐயூப்

எவ்வளவு கடும் கோபத்தையும் வெறியையும், மக்கள் இவ்வளவு நாள் அடக்கிக் கொண்டு இருந்துள்ளனர் என்பது, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்கள், காலிமுகத் திடலில் அமைத்திருந்த அரச எதிர்ப்பு போராட்டக் களத்தை தாக்கிய பின்னர் தான் தெரிகிறது.

கையில் பணம் இருந்தும், பிள்ளைக்கு கொடுக்க ஒரு பைக்கட் பால்மாவை தேடிக் கொள்ள முடியாவிட்டால், பல நாள் கஷ்டப்பட்டு தேடிக் கொண்ட பால்மாவை கரைத்துக் கொடுக்க வீட்டில் எரிவாயுவோ மண்ணெண்ணெய்யோ உரிய நேரத்துக்கு மின்சாரமோ இல்லாவிட்டால், வாடகை அறையில் தங்கி இருப்பவர் சாப்பாட்டுக்காக ஒவ்வொரு சாப்பாட்டுக் கடைக்கும் ஏறி இறங்க வேண்டியிருந்தால், தமது சம்பளத்தால் குடும்பத்தையே பராமரித்து வந்தவருக்கு ஒரு வருடத்துக்குள் அந்தக் கடமையை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டால், அந்த மனநிலை வெறியாகவே வெடித்து வெளியேறும். அதையே இப்போது காண்கிறோம்.

மக்கள் இந்த ஆத்திரத்தை, பல மாதங்களாக அடக்கிக் கொண்டு சமாளித்து வந்தனர். பின்னர், எந்த அடக்குமுறை வந்தாலும் பரவாயில்லை என்று, தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடி ஆர்ப்பாட்டம் நடத்தத் தொடங்கினர். அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் எவ்வித வன்முறையுமின்றி, உலக நாடுகளே பாராட்டும் அளவுக்கு கட்டுப்பாட்டுடன் நடத்தி வந்தனர்.

அந்த ஆர்ப்பாட்டங்களின் போது, அவர்கள் அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டு வந்த போதிலும், பொருளாதார பிரச்சினைகளால் மனதுக்குள் குமுறிக் கொண்டு தான் இருந்தனர். அவர்கள் அச்சமின்றி, ஜனாதிபதி அலுவலகத்தையும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ‘அலரி மாளிகை’யையும் முற்றுகையிட, அந்த மனக்குமுறலே அவர்களைத் தூண்டியது.

ஒரு மாத காலமாக, ஜனாதிபதியின் அலுவலகத்தின் முன்னால், ஆர்ப்பாட்டம் நடத்தி வந்த போதிலும் அவர்கள், ஒரு சிறிய கல்லையேனும் அந்த அலுவலகத்தின் மீது ஏறியாமல், மிகவும் கட்டுப்பாட்டுடன ஆர்ப்பாட்டத்தை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் தான், ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த குண்டர்கள், திங்கட்கிழமை (09) அந்த இரண்டு இடங்களில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கினர். அதன் எதிரொலியையே நாம் அன்று வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டில் ஏனைய பகுதிகளில் கண்டோம்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டதன் பின்னர், நாடே பொங்கி எழுந்து, மக்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்த ஆரம்பித்த போது, ‘வெறுப்பு வெறுப்பைத் தணிக்காது; வெறுப்பு வெறுப்பையே வளர்க்கும்’ என்ற கௌதம புத்தரின் கூற்றை, அப்போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, தமது ‘டுவிட்டர்’ கணக்கில் குறிப்பிட்டு இருந்தார்.

ஆனால், வன்முறையை ஆரம்பித்த குண்டர்கள், அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வருவதை நாடே, தொலைகாட்சி மூலம் கண்டது. அவரும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ போன்ற அரசியல்வாதிகளும், குண்டர்களை உசுப்பேற்றுவதையும் தொலைக்காட்சியில் காணக்கூடியாதாக இருந்தது.

ராஜபக்ஷர்கள் தமது கொடுமைகளை எப்போதும் சமயத்தையும் மக்களின் இனஉணர்வையும் பாவித்தே நியாயப்படுத்தி வந்துள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரி மாளிகை முன்னால் ஆர்ப்பாட்டக் களத்தை அமைத்த போது, அவர்களது கோஷங்கள் கேட்காத அளவுக்கு, அலரி மாளிகையில் இருந்து ஒலிபெருக்கி மூலம், இரவு பகலாக ‘பிரித்’ ஓதப்பட்டது. இது சமயத்தை, அரசியலுக்காகப் பாவிப்பதேயன்றி வேறோன்றுமல்ல.

பின்னர், முதல் நாள் (08) அநுராதபுரத்துக்குச் சென்று, பல முக்கிய பௌத்த தலங்களைத் தரிசித்துவிட்டு வந்த பிரதமர், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக குண்டர்களை ஏவிவிட்டு, வெறுப்பைப் பற்றிய புத்தரின் போதனைகளை எடுத்துரைக்கிறார்.

ஆளும் கட்சியினர், மக்களின் ஆர்ப்பாட்டங்களை மிகவும் குறைவாகவே மதிப்பீடு செய்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டங்களின் பின்னால், மக்கள் விடுதலை முன்னணியும் முன்னணி சோஷலிஸ கட்சி ஆகியனவே இருப்பதாகவும், மக்கள் விடுதலை முன்னணி கடந்த பொதுத் தேர்தலின் போது, மூன்று சதவீத வாக்குகளையே பெற்றது என்றும் முன்னணி சோஷலிஸ கட்சி 8,000 வாக்குகளையே பெற்றது என்றும், இவர்கள் நாட்டு மக்களின் தலைவிதியைக் கையிலெடுக்க இடமளிக்க முடியாது என்றும் அண்மையில் அக்கட்சியைச் சேர்ந்த ஓர் அரசியல்வாதி, தொலைக்காட்சி விவாதமொன்றின் போது கூறினார்.

ஆனால், இந்தப் போராட்டம் அவ்வாறானதல்ல என்பது, இப்போது தெளிவாகத் தெரிகிறது. மக்கள் விடுதலை முன்னணியினரும் முன்னணி சோஷலிஸ கட்சியினரும் ஆர்ப்பாட்டங்களின் போது, முக்கிய பங்கை ஆற்றுவது உண்மைதான். ஆனால், பொருளாதார பிரச்சினைகளால் இரத்தம் கொதித்துக் கொண்டு இருக்கும் மக்களே, பொதுவாக ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஒத்தழைப்புடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்த முன்னாள் பிரதமர் திட்டமிட்டாரா அல்லது, ஜனாதிபதிக்கு அறிவிக்காமலே அதைத் திட்டமிட்டாரா என்பது தெளிவாகவில்லை. அவர், ஜனாதிபதிக்கு அறிவிக்காமலே குண்டர்களை அலரி மாளிகைக்கு அழைத்திருந்தால், ஜனாதிபதி அதை உளவுப் பிரிவினர் மூலம் அறிந்திருக்கவில்லையா? எனவே, இந்த வன்முறையில் தமக்கு எவ்வித பங்கும் இல்லை என்று கூற ஜனாதிபதிக்கு முடியாது.

முதிர்ந்த, பல தசாப்தங்களாக அனுபவம் பெற்ற, குறிப்பாக வன்முறை அரசியலைப் பற்றிப் பரிச்சயமுள்ள முன்னாள் பிரதமர் ஏன் இவ்வாறு செய்தார் என்பது, அடுத்த கேள்வியாகும். தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும்முகமாகப் பதவி விலகுமாறு, ஜனாதிபதி ஓரிரு நாள்களுக்கு முன்னர், அமைச்சரவைக் கூட்டமொன்றின் போது பிரதமரிடம் கூறியதாக செய்திகள் வந்திருந்தன.

முன்னாள் பிரதமர் அதை ஏற்கவில்லையாம். ஆனால், பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற கருத்து, ஆளும் கட்சிக்குள் வலுத்து வந்தது. அந்த நிலையில், ஜனாதிபதியை மேலும் கஷ்டத்தில் தள்ளிவிட்டு வெளியேறுவதற்காகவே பிரதமர், இந்தத் தாக்குதலை திட்டமிட்டு இருக்கலாம் என்று ஒரு கருத்து பரவி இருக்கிறது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் வன்முறைகளை நாம் நியாயப்படுத்தாவிட்டாலும், அந்த வன்முறையிலும் ஒருவித கட்டுப்பாட்டை காண்கிறோம். அவர்கள் ஆளும் கட்சியின் சகல அரசியல்வாதிகளினது வீடுகளையும் தாக்கவில்லை. ஆளும் கட்சியைச் சேரந்தவர்களில், மக்களை வெகுவாகப் பாதிக்கும் அரசாங்கத்தின் முடிவுகளை நியாயப்படுத்திக் கொண்டு, மக்களின் அறிவை பரிகசிக்கும் வண்ணம் நடந்து கொண்டவர்களையே, மக்கள் குறி வைத்துள்ளனர். ராஜபக்ஷர்கள், ஜொன்ஸ்டன், லான்ஸா, பிரசன்ன, ரோஹித்த போன்றவர்களின் வீடுகளே தாக்கப்பட்டுள்ளன. நாம், வன்முறையை நியாயப்படுத்தாவிட்டாலும், இதன் மூலமும் மக்களின் கோபத்தைப் புரிந்து கொள்ளலாம்.

வன்முறைகள் சிலவேளைகளில், பொதுமக்களின் அபிலாஷைகளுக்கு முற்றாகவே மாற்றமான நிலைமையை உருவாக்கலாம். சிலவேளை, வன்முறைகள் கடைகளை வீடுகளை கொள்ளையடிக்கும் திசைக்குத் திரும்பலாம். 1983ஆம் ஆண்டு தமிழருக்கு எதிரான வன்செயல்களின் போதும் 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போதும் இதுவே நடந்தது.

இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக வெடித்த ஆர்ப்பாட்டங்கள், அடுத்த நாளே கடைகளையும் வீடுகளையும் கொள்ளையடிக்கும் மாபெரும் கலவரமாக மாறியது. அவ்வாறானதொரு நிலை இப்போது ஏற்பட்டால், பணம் உள்ளவரும் இல்லாதோரும் பட்டினியில் தான் இருக்க வேண்டியிருக்கும். எனவே, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய மக்கள் விடுதலை முன்னணி, முன்னணி சோஷலிஸ கட்சி போன்றவற்றின் தலைவர்கள், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, வன்முறைகள் இனக்கலவரமாகவும் மாறலாம். அவ்வாறானதொரு நிலைமையை ஆட்சியாளர்களே உருவாக்கலாம்.

தற்போதைய பிரச்சினையின் அடிப்படை, பொருளாதார நெருக்கடியாக இருந்த போதிலும், சகல தரப்பினரும் அதற்குத் தீர்வாக, ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதைப் போன்ற அரசியல் தீர்வுகளையே முன்வைக்கின்றனர். அரசியல் மாற்றங்களால், பொருளாதார பிரச்சினைகள் உடனடியாகத் தீரப்போவதில்லை. ஆனால், அந்தத் தீர்வுக்கான அரசியல் அடித்தளத்தை, அம் மாற்றங்களால் இட்டுக் கொள்ள முடியும் என்பதாலேயே, அவ்வாறு அரசியல் தீர்வுகளுக்கான ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

அதாவது, மக்களின் கோஷங்களின்படி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்வதால், பொருளாதார பிரச்சினைகள் உடனடியாகத் தீரப்போவதில்லை.

அதேபோல், கோட்டாபய ஜனாதிபதியாக இருக்கும் வரையும் இப்பிரச்சினைகள் தீரப் போவதில்லை. ஏனெனில், அவரது அரசியல் மற்றும் பொருளியல் அறிவு பூஜ்ஜியமாக இருப்பது, கடந்த இரண்டரை ஆண்டுகளில் மக்கள் புரிந்து கொண்டனர்.

அதேவேளை, ராஜபக்ஷர்கள் பாரியளவிலான ஊழல்களை நோக்கமாகக் கொண்டே, சகல பொருளாதார நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு, கோட்டாபயவின் அவ்வாறான நடவடிக்கைகளே பிரதான காரணமாக அமைந்தது.

எனவே, பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாக இருந்தால், பிரதானமாக ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும். அதன் பின்னர், பொருத்தமானதோர் ஆட்சி அமைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதற்காக பல ஆலோசனைகள் ஏற்கெனவே முன்வைக்கப்பட்டுள்ளன. சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் என்பது அவற்றில் பிரதானமானதாகும். இவை அனைத்தும் தற்காலிக ஏற்பாடுகளாகவே இருக்க வேண்டும்.

இதுவரை செய்தததைப் போல், திருடர்களைத் தெரிவு செய்யாது மக்கள், தேர்தல் மூலம் நேர்மையானவர்களைத் தெரிவு செய்து, மக்களாட்சியை உருவாக்கிக் கொள்ளாவிட்டால், இந்த நெருக்கடி அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லப்படும்.

சென்னை

# பாவத்துக்கான தண்டனையை ராஜபக்ஷ அனுபவிக்கிறார்

## போட்டு தாக்குகிறார் விஜயகாந்த்

இனப்படு கொலை செய்த பாவத்துக்கு ராஜபக்ஷ, மிகப்பெரிய தண்டனையை அனுபவித்து வருகிறார் என தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தே.மு.தி.க) தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.



கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் வன்முறை வெடித்துள்ள நிலையில் பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்துள்ளார்.

ஓர் இனத்திற்காக போராடிய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இரக்கமற்ற முறையில் கொலை செய்து, அத்தனை மக்களையும் கொலை, கொள்ளை, பலாத்காரம் செய்து மிக கொடூரமாக நடந்து கொண்ட ராஜபக்ஷவுக்கு கிடைத்த மிகப்பெரிய தண்டனை. செய்த பாவத்திற்கு ராஜபக்ஷ தண்டனையை அனுபவித்து வருகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இனப்படுகொலை செய்யப்பட்ட போது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரின் வயிறு எப்படி எரிந்ததோ, அந்த சாபம் தான் இன்றைக்கு இலங்கையே தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. பிரபாகரனுக்கு செய்து கொடுமைகளுக்காகவும், அப்பாவி தமிழர்களை கொன்றதற்காகவும் ராஜபக்ஷ குடும்பத்திற்கு கிடைத்த தண்டனையாக தான் இதை பார்க்கப்படுகிறது. இன்றைக்கு தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அவருடன் இறந்த அனைத்து தமிழீழ மக்களின் ஆன்மா சாந்தி அடைந்திருக்கும். எனவே, அந்த மக்களை இன்று நாம் நினைத்து அவர்களுக்காக பிரார்த்தனை செய்வோம் என்றும் தெரிவித்துள்ளார்.



திருவனந்தபுரம்

# இந்துவுக்கு நிதி திரட்டிய

இஸ்லாமியர்கள் கேரள மாநிலம், மலப்புரம் பகுதியைச் சேர்ந்த ராகேஷ் பாபு (38) ஓட்டோ ஓட்டி பிழைப்பு நடத்தி வருகிறார். சிறுநீரகக் கோளாறு காரணமாக கடந்த 5 மாதங்களாக அவர் ஓட்டோ ஓட்டவில்லை.

இப்போது சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக ராகேஷ் பாபு, கோழிக்கோட்டில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது அறுவை சிகிச்சைக்காக மலப்புரத்தில் உள்ள இருபதுக்கும் அதிகமான பள்ளி வாசல்களில் இஸ்லாமியர்கள் வெள்ளிக்கிழமை(06) தொழுகை முடிந்ததும் நிதி பிரித்தனர். ஏழை இந்துவின் அறுவை சிகிச்சைக்காக அந்த தொழுகை நேரத்தில் மட்டும் 1.38 இலட்சம் ரூபாய் நிதி திரண்டது. அவர்கள் நிதி பிரித்த பையில் 'ராகேஷ் பாபு சிகிச்சை நிதி" என்று எழுதப் பட்டிருந்தது.

தமிழகம்

# இரத்த உறவு திருமணத்தில் தமிழகம் முதலிடம்




இரத்த உறவு திருமணங்களில் தமிழகம் முதலிடமும், கர்நாடகத்தில் 9.6 சதவீத பெண்கள் தந்தை வழி இரத்த உறவிலும், 13.9 சதவீத பெண்கள் தாய் வழி இரத்த உறவிலும் திருமணம் செய்து கொள்வதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

இரத்த உறவு முறை கொண்ட ஆணும், பெண்ணும் திருமணம் செய்யும்போது அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்பு குறைப்பாடு, இரத்த சோகை அல்லது மரபணு பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

ஆனாலும் தென் மாநிலங்களில் இரத்த உறவு திருமணங்கள் தான் அதிகளவில் நடந்து வருகின்றன. இந்த இரத்த உறவு திருமணங்களில் கர்நாடகம் 2 ஆவது இடத்தை பிடித்து உள்ளது. கர்நாடகத்தில் 27 சதவீத மக்கள் இரத்த உறவில் திருமணம் செய்து கொள்வது தேசிய குடும்ப சுகாதார அமைப்பு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

புதுடெல்லி

# தாஜ்மஹால் வழக்கு ஏற்பு: இனிப்பு வழங்கத் தடை



தாஜ்மஹாலில் திறக்கப்படாமல் உள்ள 22 அறைகளைத் திறந்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு தொல்லியல் ஆய்வு மையத்திற்கு உத்தரவிடக் கோரிய மனுவை அலகாபாத் உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்ற மகிழ்ச்சியில் இனிப்பு வழங்கப்பட்டது.

முகலாய அரசர்களில் ஒருவரான ஷாஜஹான் ஆறாம் நூற்றாண்டில், பளிங்குக்கற்களால் கட்டியது தாஜ்மஹால். தற்போது பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) ஆளும் உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ள இதைக் கட்ட அங்கிருந்த தேஜோலாயா எனும் சிவன் கோவில் இடிக்கப்பட்டதாகப் புகார் உள்ளது. இக்கோவிலின் சிலைகள், தாஜ்மகாலில் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும் 22 அறைகளில், இருப்பதாகவும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. இதை திறந்து பார்க்க உத்தரவிடக்கோரி, உத்தரப்பிரதேசத்தின் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

மனு, நீதிமன்றத்தால் விசாரணைக்கு ஏற்கப்பட்டுள்ளது. இதை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் விதத்தில், இந்து மகாசபாவினர் தாஜ்மஹால் முன்பாக இனிப்பு விநியோகித்தனர். இதைக் கண்ட உத்தரப்பிரதேச பொலிஸார் அவர்களைத் தடுத்து திருப்பி அனுப்பினர். தாஜ்மகாலில் உள்ள சுற்றுலாவாசிகளுக்கும் இனிப்பு வழங்க முற்பட்டவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

சென்னை

# தங்க ஸ்பேனர்களுடன் ஒருவர் சிக்கினார்




சவுதி அரேபியாவின் ரியாத் நகரிலிருந்து சென்னை விமான நிலையத்திற்கு வந்த விமானத்தில் பயணி ஒருவரிடம் சந்தேகத்தின் அடிப்படையில் சென்னை சுங்கப் பிரிவைச் சேர்ந்த விமான புலனாய்வு பிரிவு அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

வெள்ளி முலாம் பூசிய சிறிதும், பெரிதும் என நட்டு, போல்டுகளை கழற்றி சரி செய்ய உதவும், 6 ஸ்பேனர்கள் அவரிடம் இருந்துள்ளன. அவற்றை ஆய்வு செய்ததில் 24 கரட் தங்கம் என தெரிய வந்துள்ளது. அவற்றின் நிறை 1.020 கிலோ கிராமாக இருந்துள்ளது. அவற்றின் மதிப்பு ரூ.47 இலட்சத்து 56 ஆயிரம் என கண்டறியப்பட்டுள்ளது.

சென்னை

# வழக்குகளில் சிக்கிய 19 வழக்கறிஞர்களுக்கு தடை

கொலை, போக்ஸோ, போலி ஆவணங்கள் தயாரித்தல், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் சிக்கிய, பெண் வழக்கறிஞர்கள் மூவர் உள்ளிட்ட 19 வழக்கறிஞர்கள் தொழில்புரிய தடை விதித்து தமிழ்நாடு, புதுச்சேரி வழக்கறிஞர்கள் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

வழக்குகளில் இழப்பீடு பெற்றது, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, குற்ற வழக்கை மறைத்தது, பணியில் இருப்பதை மறைத்தது, சிறைத் தண்டனை பெற்றது, போதைப் பொருள் கடத்தல், போலி வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான வழக்கறிஞர்கள் சென்னையைச் சேர்ந்தவர்களாவர்.


அந்த 19 வழக்கறிஞர்களும், வழக்கறிஞர்களாக எந்த நீதிமன்றத்திலும் ஆஜராகக்கூடாது என்றும், வழக்கறிஞர்களாக தொழில்புரிய தடை விதித்தும் வழக்கறிஞர்கள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# தீக்கிரை

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அவர்களின் உறவினர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவு கரம் நீட்டியவர்களின் வாகனங்கள், சொத்துகள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன், கல்லெறிந்து தாக்குதலும் நடத்தப்பட்டது. (படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்)
























## ஐ.பி.எல்:

# மும்பையைத் தோற்கடித்த கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பையின் அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, வெங்கடேஷ் ஐயரின் 43 (24), நிதிஷ் ரானாவின் 43 (26) ஓட்டங்களுடன் பெரியதொரு இலக்கை நோக்கி நகர்ந்தபோதும் ஜஸ்பிரிட் பும்ராவின் 4-1-10-5 என்ற பந்துவீச்சுப் பெறுதி காரணமாக 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 166 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை, ஆரம்பத்திலிருந்தே டிம் சௌதி, அன்ட்ரே ரஸல் (2), வருண் சக்கரவர்த்தி, பற் கமின்ஸிடம் (3) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 17.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களையே பெற்று 52 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



இப்போட்டியின் நாயகனாக ஜஸ்பிரிட் பும்ரா தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை டெல்லி கப்பிட்டல்ஸ் எதிர்கொள்கிறது.

# கிரிக்கெட்டில் பிரகாசிக்கும் மூதூர் மாணவன்



■ தீஷான் அஹமட்

19 வயதுக்கு கீழ்ப்பட்ட பாடசாலை மட்ட மாவட்ட கடினபந்து அணிக்கு மூதூரிலிருந்து முதல் வீரராக சம்ரின் முகம்மது உஸ்மான் தெரிவாகியிருக்கிறார்.

தற்போது மூதூர் வெஸ்டர்ன் வொரியர்ஸ் அணியில் சகலதுறை வீரராக நீண்ட காலமாக விளையாடி வரும் இவரிடம்

> 19 வயதுக்கு கீழ்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான தொடரில் உஸ்மான் மூதூர் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை அணியில் விளையாடி பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தார். அதன் தொடராக அவருக்கு இவ் அரிய வாய்ப்பு கிட்டியுள்ளது

காணப்பட்ட துடுப்பாட்ட மற்றும் பந்துவீச்சு முறையை அவதானித்த வெஸ்டர்ன் வாரியர்ஸ் அணியின் தலைவரும், தேசிய நடுவரும், பாடசாலை அணிகளுக்கான பயிற்றுவிப்பாளருமானவை.எஸ். எம். ஸிஹானால் இனங்காணப்பட்டு சுழற்பந்துவீச்சாளராக நீண்ட காலமாக பயிற்றுவிக்கப்பட்டு வந்துள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற மாவட்ட மட்ட 19 வயதுக்கு கீழ்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான தொடரில் உஸ்மான் மூதூர் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை அணியில் விளையாடி பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தார். அதன் தொடராக அவருக்கு இவ் அரிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

# மனேயைக் கைச்சாத்திடும் பயேர்ண் மியூனிச்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான சாடியோ மனேயைக் கைச்சாத்திடுவது குறித்து ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் திட்டமிடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 வயதான மனேயின் முகவரை பயேர்ண் மியூனிச் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், லிவர்பூலுடன் பயேர்ண் மியூனிச் தொடர்பு கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

> லிவர்பூலுடன் அடுத்தாண்டு வரையில் மனே ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறார்

லிவர்பூலுடன் அடுத்தாண்டு வரையில் மனே ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆர்சனலுக்குச் செல்லும் ஸ்டேர்லிங்க்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ரஹீம் ஸ்டேர்லிங்கை, அக்கழகம் விற்க இணங்கினால் அவரைக் கைச்சாத்திடுவது குறித்து இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் ஆராய்ந்து வருகிறது.

சிற்றியுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தை 27 வயதான ஸ்டேர்லிங்க் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

> இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் ஆராய்கிறது

சிற்றிக்காக 223 போட்டிகளில் விளையாடி 90 கோல்களை ஸ்டேர்லிங்க் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனா

### சீனாவின் பொருளாதாரத்தில்

# சரிவு



உலக அளவில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய பொருளாதார வல்லரசாக சீனா திகழ்ந்து வருகிறது.

எனினும் கொரோனாத் தொற்றுப் பரவல் மீண்டும் தலைதூக்கி இருப்பதால், சீனாவின் பொருளாதாரம் அண்மைக்காலமாக சரிவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சீனாவின் முக்கிய தொழில் நகரான ஷாங்காயிலும், இதர தொழில் நகரங்களிலும் தீவிரமடைந்து வரும் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், பொது மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் காணப்படுவதுடன், தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதால் முதலீட்டாளர்களும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.


இதனால், கார்கள், இலத்திரனியல் பொருட்கள் மற்றும் இதர தொழில்துறைகளில் உலகளாவிய வர்த்தகம் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் உலக அளவில் பரபரப்பாக இயங்கி வந்த ஷாங்காய் துறைமுகம், தற்போது வழக்கம்போல் இயங்கிவந்தாலும் , பொருட்களைக் கையாள்வதில் வழக்கத்தை விட 30 சதவீதம் குறைவாக செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நடப்புக் காலாண்டிலும் இச் சரிவுநிலை தொடரும் எனப் பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரேன்

# மோப்ப நாய்க்கு பதக்கம்



ரஷ்ய படைகளால் புதைக்கப்பட்ட 100 க்கும் மேற்பட்ட கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்த ஜாக் ரசல் இன மோப்ப நாய்க்கு உக்ரேன் ஜனாதிபதி பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளார்.

'பேட்ரன்' எனப் பெயரிடப்பட்டுள்ள அந்நாய்க்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முன்னிலையில், குறித்த பதக்கத்தை செலன்ஸ்கி அணிவித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்றன

## பாகிஸ்தான்

# சீனி ஏற்றுமதிக்குத் தடை




உள்நாட்டுத் தேவை அதிகரித்து வருவதால், சீனி ஏற்றுமதிக்குப் பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவல் மற்றும் ஊரடங்கு கட்டுப்பாடுகளால் பாகிஸ்தானில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் உள்நாட்டுத் தேவை அதிகரித்து வருவதால், சீனி ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளதாக அந்நாட்டின் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் நேற்று முன்தினம் (09) தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "உள்நாட்டு தேவையைக் கருத்தில் கொண்டு, சீனி ஏற்றுமதியை முழுமையாகத் தடை செய்து உத்தரவிட்டுள்ளேன். அத்துடன் சீனிக் கடத்தல் மற்றும் பதுக்கலுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளேன். இனிமேல் தங்கள் கடமைகளில் அலட்சியமாக இருப்பவர்கள் மீது சகிப்புத்தன்மை காட்டப்படாது" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சீனா



# இரத்த சிவப்பில் தோன்றிய வானம்

### பீதியில் உறைந்த மக்கள்

சீனாவின் துறைமுக நகரமான ஜூஷானில்( Zhoushan)திடீரென வானம் முழுவதும் இரத்த சிவப்பு நிறமாக மாறிய சம்பவம் நேற்று முன்தினம் (09) இடம்பெற்றுள்ளது.

இதன்போது வானம் இரத்த சிவப்பு நிறத்தில் காட்சியளிப்பதைக் கண்டு மக்கள் பீதியடைந்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அந்நாட்டு வானிலை ஆய்வு மைய நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "அடர்த்தியான புகைமூட்டம் காரணமாக சூரிய ஒளி தரையை அடைய முடியாமல் சிவப்பு நிறமாக மாறியமையே வானில் ஏற்பட்ட இம் மாற்றத்திற்குக் காரணம்" எனத் தெரிவித்துள்ளனர்.

## போலாந்து

# ரஷ்ய தூதருக்கு ஏற்பட்ட சோதனை



2ஆம் உலகபோரின் முடிவில் சென்ற 1945ஆம் வருடம் ஹிட்லர் தலைமையிலான நாஜி படைகளுக்கு எதிராகப் போரிட்ட ரஷ்யா வெற்றியடைந்தது.

இதனை நினைவுகூரும் வகையில் ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவிலுள்ள செஞ்சதுக்கத்தில் கடந்த 9 ஆம் திகதி இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இதேபோல் போலந்து நாட்டிலுள்ள வார்சா நகரிலும் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றதோடு போரில் இறந்த சோவியத் யூனியன் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நடைபெற்றது.

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள சூழ்நிலையிலும், இக் கொண்டாட்டங்கள் நடைபெறுவதால், போலந்திலுள்ள உக்ரேன் ஆதரவாளர்கள் சிலர் அப்பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் குறித்த நிகழ்வில் பங்கேற்பதற்காகப் போலந்து நாட்டுக்கான ரஷ்ய தூதர் செர்கே ஆண்ட்ரீவ் சென்ற போது, அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட நபர் ஒருவர் ரஷ்ய தூதர் மீது சிவப்பு நிற தீந்தையை வீசியதால், அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாகவும், இதனையடுத்து அவர் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளாமல் சென்றுவிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்கொரியா

# தென்கொரியாவின் புதிய ஜனாதிபதியாக 'யூன் சுக்'

தென்கொரியாவின் புதிய ஜனாதிபதியாக கன்சர்வேட்டிவ் கட்சியின் யூன் சுக் இயோல் (yoon-suk-yeol) பதவியேற்றுள்ளார்.

தென் கொரியாவில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் டெமோக்ரட்டிக் கட்சி சார்பில் போட்டியிட்ட மூன் - ஜே - இன் தோல்வியைத் தழுவியதோடு, அந்நாட்டின் உயர்மட்ட வழக்கறிஞராகக் கருதப்படும் யூன் சுக் இயோல் குறுகிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.



ஜனாதிபதியாக யூன் சுக் இயோல் பதவியேற்கும் விழா நேற்றைய தினம்(10) சியோலில்

இந்நிலையில் நாட்டின் புதிய ஜனாதிபதியாக யூன் சுக் இயோல் பதவியேற்கும் விழா நேற்றைய தினம்(10) சியோலில் நடைபெற்றது.

இதன் போது "ஜனாதிபதிக்கான கடமைகளை உண்மையாக நிறைவேற்றுவேன் என உறுதிமொழி எடுத்துக்கொண்ட அவர், தேவை ஏற்பட்டால் வட கொரியா மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டேன்" எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் தென் கொரிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள யூன் சுக் இயோலுக்கு உலகத் தலைவர்கள் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 11 மே 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.